# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:120 ★31.08.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:120 ★31.08.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணை நாளை திறப்பு: முதல்வர் வருகையையொட்டி முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரம்

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு முதல்வர் விஜய் நாளை (1ம் தேதி) தண்ணீர் திறந்து வைக்க உள்ள நிலையில், அணை மற்றும் மேட்டூர் நகரப் பகுதிகளில் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

முதல்வர் விஜய் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் சேலம் வந்து, அங்கிருந்து சாலை மார்க்கமாக மேட்டூர் அணைக்கு செல்கிறார். தொடர்ந்து, அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீரைத் திறந்து வைக்கிறார். இதையொட்டி, அணையில் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் வரும் வழிகளில் பொதுமக்கள் அதிகளவில் கூடுவார்கள் என்பதால், முக்கியச் சந்திப்புகள், மக்கள் கூடும் இடங்கள் மற்றும் மேட்டூர் நகரப் பகுதிகளில் இரும்புத் தடுப்புக் கம்பிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், மாவட்ட நிர்வாகம் சார்பில் முதல்வருக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



முதல்வர் வருகையையொட்டி போக்குவரத்து மாற்றங்கள், வாகன நிறுத்துமிடங்கள், காவல் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளையும் போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். ஏடிஜிபி தலைமையில் ஐஜி, டிஐஜி, எஸ்பிக்கள் உள்ளிட்ட 3,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

நீர் வரத்து அதிகரிப்பு: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து நேற்று காலை விநாடிக்கு 6,887 கனஅடியாக இருந்த நிலையில், மாலை 9,035 கனஅடியாக அதிகரித்தது குடிநீருக்காக விநாடிக்கு 2,000 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 90.47 அடியாகவும், நீர்இருப்பு 53.19 டிஎம்சியாகவும் இருந்தது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 6,500 கனஅடியாக இருந்த நீர் வரத்து, நேற்று 10,000 கனஅடியாக அதிகரித்தது.

# 23 ஐந்து ரூபாய் நாணயங்கள் உட்பட 48 பொருட்களை விழுங்கிய மனவளர்ச்சி குன்றிய இளைஞர்

## அறுவை சிகிச்சை மூலம் அகற்றி திருவண்ணாமலை சாய் ராம் மருத்துவமனை சாதனை

திருவண்ணாமலை அருகே மனவளர்ச்சி குன்றிய 16 வயது இளைஞரின் இரைப்பையில் இருந்து 23 ஐந்து ரூபாய் நாணயங்கள், தாயத்து, நகவெட்டி, ஹேர்பின், இரும்பு ஆணி உள்ளிட்ட 48 கூர்மையான மற்றும் உலோகப் பொருட்களை அறுவை சிகிச்சை மூலம் பாதுகாப்பாக அகற்றி சாய் ராம் பல்நோக்கு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

திருவண்ணாமலை அடுத்த அய்யம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பிரித்திக் ரோஷன் (16) மனவளர்ச்சி குன்றியவர். கடந்த சில நாட்களாக அவருக்கு வயிற்று வலி மற்றும் தொடர் வாந்தி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவரது தாயார் கடந்த 22ம் தேதி திருவண்ணாமலை தண்டராம்பட்டு சாலையில் உள்ள சாய் ராம் பல்நோக்கு மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்றார். அங்கு பொது அறுவை சிகிச்சை நிபுணரின் இரைப்பையில் இருந்து 23 ஐந்து ரூபாய் நாணயங்கள், தாயத்து, நகவெட்டி, ஹேர்பின்கள், இரும்பு ஆணி மற்றும் பல்வேறு கூர்மையான உலோகப் பொருட்கள் என மொத்தம் 48 பொருட்கள் பாதுகாப்பாக அகற்றப்பட்டன. பல மணி நேரம் நடைபெற்ற சிகிச்சைக்குப் பின்னர் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்த பிரித்திக் ரோஷன் உடல்நலம் தேறியதைத் தொடர்ந்து, நேற்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு தனது சொந்த கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், பிரித்திக் ரோஷனின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவருக்கு மருத்துவமனை நிர்வாகம் சார்பில் எந்த வித கட்டணமும் வசூலிக்காமல் இலவ



டாக்டர் சுந்தரபாண்டியன், பிரித்திக் ரோஷனை பரிசோதித்தார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஸ்கேன் பரிசோதனையில் அவரது இரைப்பையில் சந்தேகத்திற்கிடமான உலோகப் பொருட்கள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, மருத்துவர் பிரித்திக் ரோஷனின் தாயாரிடம் விசாரித்தபோது, வீட்டில் அவ்வப்போது நகவெட்டி, செயின் உள்ளிட்ட சிறிய பொருட்கள்காணாமல் போவதாக தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால் இளைஞர் பல்வேறு பொருட்களை விழுங்கியிருக்க லாம் என சந்தேகிக்கப்பட்டது.

நிலைமை தீவிரமாக இருந்ததால், நள்ளிரவில் மயக்கவியல் நிபுணர் வரவழைக்கப்பட்டு உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சையின்போது இளைஞசமாக சிகிச்சை அளிக்கப்பட்டதாக டாக்டர் சுந்தரபாண்டியன் தெரிவித்தார். மனவளர்ச்சி குன்றிய இளைஞரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இரைப்பையில் இருந்த பல்வேறு கூர்மையான மற்றும் உலோகப் பொருட்களை உரிய நேரத்தில் அறுவை சிகிச்சை மூலம் அகற்றி, அவரது உயிரைக் காப்பாற்றிய மருத்துவக் குழுவினருக்கு பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் பாராட்டு தெரிவித்தனர். இச்சம்பவம், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள்அருகில் இருக்கும் சிறிய பொருட்களை விழுங்கிவிடும் வாய்ப்பு உள்ளதால், பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் அவர்களை தொடர்ந்து கவனமாக கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டியுள்ளது.



இராணிப்பேட்டை மாவட்ட காவல்துறை இராணி ப்பேட்டை மாவட்ட ஆயு த ப்படை மைதானத்தில் நடைபெற்ற வாராந்திர உடற்பயிற்சியை மா வட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பே.சிபின், இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தி ரு.குணசேகரன் (CWC), துணை காவல் கண்காணிப்பாளர் திரு. குமார் (DCRB),காவல்அதிகாரிகள்மற்றும்காவல்ஆளிநர்கள்கலந்துகொண்டனர்.

# அமரராஜா தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிடக் கோரி சிஐடியு ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே மாங்கால் கூட்ரோடு பகுதியில் செயல்பட்டு வரும் அமரராஜா தனியார் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு எதிரான பழிவாங்கும்நடவடிக்கைகள்மற்றும்தொழிலாளர் விரோதப் போக்கை கண்டித்து, சிஐடியு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் தோழர் சங்கர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாநில துணைப் பொதுச்செயலாளர் முத்துக்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மாவட்டச் செயலாளர் நாகராஜ் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில், தொழிலாளர்களை அபாயகரமான பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது, பழிவாங்கும் நடவடிக்கைகளை உடனடியாக கைவிட வேண்டும், தொழிலாளர்களை அச்சுறுத்தி போட்டி தொழிற்சங்கத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும், தொழிற்சாலையில் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து தொழிலாளர் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொதுச் செயலாளர் முரளி, சிஐடியு மின்வாரிய ஊழியர் சங்க ஓய்வு பெற்ற நிர்வாகி ஸ்ரீதரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க துணை மாநிலச் செயலாளர் சரவணன், தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற ஊழியர் பூபாலன், வெண்பாக்கம் வட்டாரத் தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.




ஆர்ப்பாட்டத்தில் சிஐடியு நிர்வாகிகள், பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள்திரளாகபங்கேற்று, தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

## மலேசியாவில் வீட்டு வேலைக்குச் சென்ற இளம்பெண் மர்ம மரணம்:

# உடலை சொந்த ஊருக்கு கொண்டு வரக்கோரி 3 குழந்தைகளுடன் கணவர் சாலை மறியல்

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அடுத்த கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சக்திவேலின் மனைவி பிரியதர்ஷினி (30). இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர். குடும்பச் சூழ்நிலை காரணமாக கடந்த ஜனவரி மாதம் பெருங்குளத்துரைச் சேர்ந்த முகவர் மூலம் பிரியதர்ஷினி மலேசியாவுக்கு வீட்டு வேலைக்குச் சென்றதாக கூறப்படுகிறது.

மலேசியாவில் பணிபுரிந்து வந்த வீட்டின் உரிமையாளர் தனக்கு பாலியல் தொந்தரவு அளிப்பதாகவும், ஆபாசமாகப் பேசி துன்புறுத்துவதாகவும் கடந்த சில நாட்களுக்கு முன்பு கணவர் சக்திவேலிடம்பிரியதர்ஷினிதொலைபேசியில் அழுது புலம்பியதாக கூறப்படுகிறது. மேலும், தன்னை மீண்டும் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்லுமாறு கணவரிடம் கேட்டதாகவும், இது குறித்து வீட்டின் உரிமையாளரிடம் கேட்டபோது ரூ.2 லட்சம் வழங்கினால் மட்டுமே பிரியதர்ஷினியை அனுப்புவதாக மிரட்டியதாகவும் சக்திவேல் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், கடந்த 22ம் தேதி பிரியதர்ஷினி உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவரது உறவினர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. இதுகுறித்து வீட்டின் உரிமையாளரிடம் விசாரித்தபோது, புகார் அளித்தால் தனது மனைவியை உயிருடன் பார்க்க முடியாது என மிரட்டியதாக சக்திவேல் குற்றம் சாட்டியுள்ளார். இதையடுத்து, கடந்த 25ம் தேதி பிரியதர்ஷினியை மீட்டு சொந்த ஊருக்கு அழைத்து வரநடவடிக்கை எடுக்கக் கோரி அவரது உறவினர்கள் மலேசிய தூதரகத்துக்கு மின்னஞ்சல் மூலம் புகார் அளித்ததாக கூறப்படுகிறது. புகார் அளித்த சில மணி நேரங்களிலேயே பிரியதர்ஷினி உயிரிழந்துவிட்டதாக குடும்பத்தினருக்கு அதிர்ச்சித் தகவல் கிடைத்துள்ளது. பாலியல் தொந்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் தனது மனைவி தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ள சக்திவேல், பிரியதர்ஷினியின் மரணத்தில் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும், அவரது உடலை மீட்டு சொந்த ஊருக்கு கொண்டு வர மத்திய, மாநில அரசுகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்துள்ளார்.




இதுதொடர்பாக சக்திவேல் முதலமைச்சரின் தனிப்பிரிவிலும் மனு அளித்துள்ளார். இந்நிலையில், பிரியதர்ஷினியின் உடலை விரைந்து மீட்டுதரக்கோரி கணவர் சக்திவேல், தனது 3 குழந்தைகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட உறவினர்களுடன் தானிப்பாடி சோதனைச்சாவடி அருகே திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்ட துடன் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த வட்டாட்சியர் ராஜேந்திரன் மற்றும் காவல் ஆய்வாளர் ஜெயதேவி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.பிரியதர்ஷினியின் உடலை மலேசியாவில் இருந்து மீட்டு சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையடுத்து, சக்திவேல் மற்றும் அவரது உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

மலேசியாவில் வீட்டு வேலைக்குச்சென்ற இளம்பெண் உயிரிழந்த சம்பவத்தில்அவரது குடும்பத்தினர் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ள நிலையில், பிரியதர்ஷினியின் மரணம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி உண்மை நிலையை வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதே அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் கோரிக்கையாக உள்ளது. மலேசியாவில் பணிபுரிந்த தண்டராம்பட்டு பகுதியைச் சேர்ந்த இளம்பெண் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# உண்ணாமலைப்பாளையத்தில் பிரதமர் மோடியின் 'மனதின் குரல்' நேரடி ஒளிபரப்பு: திரளாக பங்கேற்ற மகளிர்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் உண்ணாமலைப்பாளையம் கிராமத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் 137வது 'மனதின் குரல்' (மன் கி பாத்) நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பு நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பிரதமரின் உரையை ஆர்வத்துடன் கேட்டனர்.




பிரதமர் நரேந்திரமோடி, மாதந்தோறும் இறுதி ஞாயிற்றுக்கிழமை வானொலி வாயிலாக நாட்டு மக்களிடம் உரையாற்றும் 'மன் கி பாத்' நிகழ்ச்சி மூலம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சிறப்பான சமூக முயற்சிகள், சாதனைகள் மற்றும் புதுமையான செயல்பாடுகளை மக்களிடம் கொண்டு செல்கிறார்.

சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி, பெண்கள் முன்னேற்றம், சமூக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து பிரதமர் நிகழ்ச்சியில் எடுத்துரைத்து வருகிறார். குறிப்பாக, சாதாரண மக்களின் அசாதாரண சாதனைகள், சமூக நலனுக்காக மேற்கொள்ளப்படும் தன்னார்வ முயற்சிகள் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் புதுமையான செயல்பாடுகள் குறித்தும் அவர் பாராட்டி வருகிறார்.

இந்த நிலையில், பிரதமரின் 137வது 'மனதின் குரல்' நிகழ்ச்சி இன்று நாட்டின் 21 இடங்களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதன் ஒரு பகுதியாக திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் உண்ணாமலைப்பாளையம் கிராமத்திலும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள் பிரதமரின் உரையை நேரடியாகக் கேட்டு, அதில் இடம்பெற்ற கருத்துகள் மற்றும் சமூக நலன் சார்ந்த தகவல்களை அறிந்து கொண்டனர். குறிப்பாக, ஏராளமான பெண்கள் பங்கேற்றது நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக அமைந்தது. நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சியின் திருவண்ணாமலை தெற்கு மாவட்டத் தலைவர் ரமேஷ், கூட்டமைப்புச் செயலாளர் குணசேகரன், மாவட்ட பொதுச் செயலாளர் ரமேஷ் ஜெய்நாத், எழிலரசி முருகேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் ஏராளமான மகளிர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்குப் பின்னர் பேசிய பங்கேற்பாளர்கள், 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் மக்கள் நலப் பணிகள், சாதனையாளர்களின் முயற்சிகள் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான புதிய சிந்தனைகளை அறிந்து கொள்ள முடிந்தது. இந்த நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றது மிகவும் பயனுள்ளதாக இருந்தது என தெரிவித்தனர்.

மேலும், கிராமப்புற மக்களிடையே சமூகப் பொறுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்கள் முன்னேற்றம் மற்றும் நாட்டின் வளர்ச்சியில் பொது மக்களின் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.




பழனியில், லயன்ஸ் கிளப் ஆப் பழனி டவுன் சங்கம் சார்பாக, பசிப்பிணி போக்கும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பட்டய தலைவர், செயலாளர், தலைவர் செயலாளர் பொருளாளர் துணைத் தலைவர் துணைச் செயலாளர் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார்கள்.

# இராணிப்பேட்டை நவல்பூரில் ராயல் என்பீல்டு ஷோரும் மூன்றாவது கிளை திறப்பு விழா

இராணிப்பேட்டை மாவட்டம் முத்துகடை அடுத்த நவல்பூர் ரவுண்டானாவில் பென்மோட்டார் ஸோன் சார்பில் சியோன் சர்ச் பாதிரியார் இமானுவேல் பால் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்பு பிரார்த்தனை களை இதன் உரிமையாளர் பெஞ்சமின் மற்றும் பங்குதாரர் ஏஞ்சல் பெஞ்சமின் ஆகியோர் அனைவரையும் வர






ராயல் என்ஃபீல்டு புதிய ஷோரூம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக இராணிப்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் தாஹிரா மற்றும் வேலூர் நடத்தினர். விழாவில் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், அனைத்து கட்சியை சார்ந்த பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கு வருகை தந்தவர் வேற்றனர்.

ஏற்கனவே வேலூர் மற்றும் சோளிங்கர் பகுதிகளில் இந்நிறுவனத்திற்கு சொந்தமான ஷோரூம் கிளைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது



# பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்க்கும் நிலை குறைய வேண்டும்: கொடைக்கானலில் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் பேச்சு

'முதியோர் இல்லத்தில் உள்ளவர்களிடம், 'நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?' என்று கேட்டால், அந்த முதியோர்கள் சொல்லும் அந்த வரலாறு மனதை வேதனைப்படுத்துகிறது. பெற்று, வளர்த்து, ஆளாக்கி, அழகு பார்க்கும் பெற்றோர்களை முதியோர்இல்லத்தில் சேர்க்கும் நிலை குறைய வேண்டும்"

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கீழ்மலை கிராமத்தில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சியில் பங்கேற்ற சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் பேச்சு



பழனி அருகே கோரிக்கடவு கிராமத்தைச் சேர்ந்த சபரி மற்றும் அவரது கூட்டாளிகளுடன் சேர்ந்துஅத்தி வலசு கோட்டத்துறை மேல் கரைப்பட்டிகீரனூர்ஆகிய பகுதிகளில்தொடர்ந்து வளர்ப்பு ஆடுகளை திருடி வந்தனர்.இதனைத் தொடர்ந்து கீரனூர் காவல் நிலையத்தில் தொடர் ஆட்டு திருட்டு புகார் வந்து கொண்டவண்ணம் இருந்தது. இதனை தொடர்ந்து கீரனூர் காவல் ஆய்வாளர் மற்றும் சார்ஆய்வாளர் தலைமையில் விசாரணை செய்யப்பட்டு கோரிக் கடவு சபரி மற்றும்கூட்டாளிநான்குநபர்களைகீரனூர்காவல் துறை கைது செய்தனது அப்போது இரண்டு சக்கர வாகனம் 4சக்கர வாகனம் 1 ஆடு போன்றவற்றை பரிமுதல் செய்தனர் .



திண்டுக்கல்மாவட்டம்சீலப்பாடிஆயுதப்படை மைதானத்தில் ஆயுதப்படை காவலர்களின் வாராந்திர கவாத்து பயிற்சி மற்றும் உடற்பயிற்சியினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் பார்வையிட்டு, காவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கி காவலர்களிடம் நிறை குறைகளை கேட்டறிந்தார்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் கீரனூர் ஆலங்குளத்தில் விவசாய பயன்பாடு என்ற பெயரில்JCBஇந்திரங்கள்மூலம்டிப்பர்லாரிகளில் செங்கல் சூளைகளுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்கின்றனர்.எனவே உடனடியாக செங்கல் சூளைக்கு விற்பனை செய்யும்இயந்திரம் மற்றும் டிப்பர் லாரிகளின் மூலமாக முறைகேடாக மண் எடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பழனி வருவாய் அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் சார்பாக கோரிக்கை வைக்கின்றனர் நடவடிக்கை எடுக்குமா?

# விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்குகூட்டரங்கில் விநாயகர் சதுர்த்தி விழா 2026ஆம் வரும் 14.09.2026 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மேற்கொள்




ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்வி.வி. சாய் பிரணித், இ.கா.ப., பொன்னேரி சார் ஆட்சியர் ப.அப்துல் ராசிக், திருத்தணி உதவி காவல் கண்காணிப்பாளர் சுபம் தீமன், துணை ஆணையர்கள் வினோத் சாந்தாராம், (சட்டம் ஒழுங்கு (ஆவடி)), மகேஸ்வரி (சட்டம் ஒழுங்கு(செங்குன்றம்)), கூடுதல்காவல் கண்காணிப்பாளர் கலியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், வருவாய் கோட்டாட்சியர்கள் ரவிச்சந்திரன் (திருவள்ளூர்), ராஜகோபால் (திருத்தணி) மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பழனியில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

பழனி மதனீசா முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியில் 20012002 கல்வி



யாண்டில் 10ம் வகுப்பு பயின்ற முன்னாள் மாணவமாணவிகளின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா மறுசந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசு ஊழியர்கள், தொழிலதிபர்கள் என பல்வேறு துறைகளில் உள்ள முன்னாள் மாணவர்கள் குடும்பத்துடன் பங்கேற்று பள்ளிப் பருவ நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

தங்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டு இனிப்புகளைப் பரிமாறி மகிழ்ச்சியுடன் விடைபெற்றனர்.

# விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 36ஆம் ஆண்டு விளையாட்டு விழா




மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த நல்லூர் சோலையம்மன் நகர் விவேகானந்தா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியில் 36ஆம் ஆண்டு விளையாட்டு விழா பள்ளியின் தாளாளர் டாக்டர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஜெயலட்சுமி வரவேற்றார். முதல்வர் செல்வக்குமார், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழி வர்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் ஜெயலட்சுமி அனைவரையும் வரவேற்றார்.

முதல்வர் செல்வக்குமார், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழி வர்மன், திலீபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சோழவரம் காவல் நிலைய குற்றவியல் ஆய்வாளர் பரணீதரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மெடல் அணிவித்து சான்றிதழ்கள், ஆசிரியர்களுக்கு பரிசுகளையும் வழங்கி சிறப்புரையாற்றும் பொழுது, பல்வேறு விளையாட்டுகளில் சாதிப்பவர்கள் நல்ல கல்லூரியில் சேரும் வாய்ப்பும், அரசாங்க வேலைகளுக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றார். சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவரும் ரெட்ஹில்ஸ் நண்பன் இதழின் ஆசிரியருமான நண்பன் எம். முகம்மது அபுபக்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரிய ஆசிரியைகள் பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**இறப்புக்கு முன் ரத்த தானம்**
**இறப்புக்கு பின் கண் தானம்**

தேசபக்தி



### கே.ஜி.எஃப். பெத்தமங்கலாவில் நூலியா சந்தாயா ஜெயந்தி:

# உள் ஒதுக்கீட்டில் 'ஏ' பிரிவில் சேர்க்க வேண்டும்; பாலகிருஷ்ணப்பா அதிரடி கோரிக்கை

## கோரிக்கை நிறைவேறாவிட்டால் வீதியில் இறங்கி போராட்டம் - அரசுக்கு பாலகிருஷ்ணப்பா எச்சரிக்கை

கே.ஜி.எஃப். பெத்தமங்கலாவில் 12ஆம் நூற்றாண்டின் துறவியும், காயக யோகியுமான சிவ சரணர் ஸ்ரீ நூலியா சந்தாயாவின் 919வது பிறந்த நாள்விழாபக்தியுடனும், உற்சாகத்துடனும் வெகு விமரிசையாக நடைபெற்றது. நூலியா சந்தாயா ஜெயந்தியை முன்னிட்டு பெத்தமங்கலா நகரமே விழாக் கோலம் பூண்டது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, நகரின் பிரதான வீதிகளில் பிரம்மாண்டமான பல்லக்கு ஊர்வலம் நடைபெற்றது. மேளதாளங்கள் முழங்க, பாரம்பரிய கலைக் குழுக்களின் நடன நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்த ஊர்வலம் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.



இதற்கு முன்னதாக, விழாவில் கலந்து கொண்ட சமூகத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, சிவசரணர் ஸ்ரீ நூலியா சந்தாயாவின் உருவப்படத்திற்கு சிறப்புபூஜைகள்நடத்தப்பட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சமூகத் தலைவர் பாலகிருஷ்ணப்பா முக்கிய கோரிக்கையை முன்வைத்து பேசினார்.

தங்களது சமூகத்தை பட்டியல் சாதி உள் ஒதுக்கீட்டின் 'ஏ' பிரிவில் சேர்க்க வேண்டும் என்பதே நீண்டகால கோரிக்கை என்று அவர் தெரிவித்தார். கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களில் தங்களது சமூக மக்களுக்கு உரிய வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுவதாகவும் பாலகிருஷ்ணப்பா கூறினார்.

பல ஆண்டுகளாக இந்தக் கோரிக்கை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வருவதாகவும், இனியும் தாமதம் செய்யாமல் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"இனி தாமதம் வேண்டாம்!"

தங்களது சமூகத்தின் கோரிக்கையை அரசு தீவிரமாக பரிசீலித்து, உள் ஒதுக்கீட்டில் 'ஏ' பிரிவில் சேர்ப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் என பாலகிருஷ்ணப்பா வலியுறுத்தினார்.

கோரிக்கை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டால், வரும் நாட்களில் சமூக மக்கள் ஒன்றிணைந்து ஜனநாயக முறையில் வீதியில்இறங்கிபோராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இதனால் நூலியா சந்தாயா ஜெயந்தி விழாவில், சமூகஉரிமைக்கான கோரிக்கை முக்கியத்துவம் பெற்றது.

'காயகவே கைலாசம்' – நூலியா சந்தாயாவின் கொள்கை!

நிகழ்ச்சியில் பேசியவர்கள், 12ஆம் நூற்றாண்டில் பசவாதி சரணர்களுடன் வாழ்ந்த நூலியா சந்தாயாவின் வாழ்க்கை மற்றும் கொள்கைகளை நினைவு கூர்ந்தனர்.

உழைப்பின் மாண்பை உலகிற்கு எடுத்துரைத்தவர் நூலியா சந்தாயா என்றும், 'காயகவே கைலாசம்' என்ற உயரிய சிந்தனையை தனது வாழ்வின் மூலம் வெளிப்படுத்தியவர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உழைப்பை மதிப்பது, நேர்மையாக வாழ்வது மற்றும் சமூக ஒற்றுமையை வளர்ப்பது போன்ற அவரது கொள்கைகள் இன்றைய தலைமுறைக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக இளைஞர்கள் நூலியா சந்தாயாவின் வாழ்க்கை மற்றும் கொள்கைகளை அறிந்து கொண்டு, கடின உழைப்பையும் சமூக ஒற்றுமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் விழாவில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பக்தி நிகழ்ச்சிகள், சிறப்பு பூஜைகள், மலர் அஞ்சலி, பல்லக்கு ஊர்வலம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்வுகளுடன் கே.ஜி.எஃப். பெத்தமங்கலாவில் நூலியா சந்தாயா ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது.

அதே நேரத்தில், உள் ஒதுக்கீட்டில் 'ஏ' பிரிவில் சேர்க்க வேண்டும் என்ற நீண்டகால கோரிக்கையை சமூகத் தலைவர் பாலகிருஷ்ணப்பா அரசின் முன் வலுவாக முன்வைத்தார். கோரிக்கைக்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையெனில் ஜனநாயக முறையில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய சூழல் உருவாகும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இதனால் கே.ஜி. எஃப். பெத்தமங்கலாவில் நடைபெற்ற நூலியா சந்தாயா ஜெயந்தி விழா, பாரம்பரியத்தையும் சமூக ஒற்றுமையையும் மட்டுமின்றி, சமூக உரிமைக்கான முக்கிய குரலாகவும் அமைந்தது.



### திண்டுக்கல் அருகே கொள்ளை வழக்கில்

# 8 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த நீதிமன்ற பிடியானை குற்றவாளி கைது

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே கடந்த 2018ம் ஆண்டு கொள்ளை வழக்கில் வேலூர்மாவட்டம், காட்பாடி, செம்பரவாயநல்லூரை சேர்ந்த மதியழகன்(40) என்பவரை செம்பட்டி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர் இதனைத் தொடர்ந்து மதியழகன் நீதிமன்ற பிணை பெற்று வெளியே சென்று 8 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததால் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இது தொடர்பாக செம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் சரவணன் தலைமையில் சார்பு ஆய்வாளர் ஷேக் அப்துல்லா மற்றும் காவலர்கள் தீவிர விசாரணை மேற்கொண்டு செம்பரவாயநல்லூரில்பதுங்கிஇருந்த மதியழகனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நீதிமன்ற பிடியாணையை நிறைவேற்றினர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆட்கள் பற்றாக்குறை காரணமாக கடந்த இரண்டு மாதங்களாக பத்திரப்பதிவு முடித்தும் களப்பணிபார்த்துபத்திரங்களைஉரிமையாளரிடம்திரும்ப ஒப்படைக்காமல் பத்திரங்கள் தேக்கமடைந்துள்ளது பதிவுத்துறையின் இந்த காலதாமதினால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகிறார்கள்....இதனால் தமிழ்நாடு அரசும் பத்திர பதிவுத்துறையும் உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து பத்திரப்பதிவு முடிந்தும் கடந்த 60 நாட்களாக தேங்கியுள்ள பத்திரங்களை உரிய உரிமையாளர்களும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.







### ஒழுகூர் கிராமத்தில் ஸ்ரீ ஆதிகாசி சித்தர் பீடத்தில்

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் அடிகளார் சின்னவர் அம்மா கலச விளக்கு வேள்வி பூஜையை துவக்கி பொதுமக்களுக்கு 1008 மரக்கன்றுகள் வழங்கி சிறப்பித்தார்

ஒழுகூர்கிராமத்தில் அருள்மிகு ஶ்ரீ ஆதிகாசி சித்தர் பீடத்தில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் அடிகளார் சின்னவர் அம்மா கலச விளக்கு வேள்வி பூஜையை துவக்கி பொதுமக்களுக்கு 1008 மரக்கன்றுகள் வழங்கி சிறப்பித்தார்

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை அடுத்த ஒழுகூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதிகாசி சித்தர் பீடத்தில் சிறப்பு ஆன்மிக நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் அருள்திரு பங்காரு அடிகளார் அருளோடு, அருள்திரு சின்னவர் அம்மா சிறப்பு வருகை தந்தார் அவருக்கு இயற்கையை இறைவன் ஆதிகாசி சித்தர் பீடத்தின் நிறுவனர் ஓம் மூர்த்தி தலைமையில் ஏராளமான பக்தர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் சார்பில் சிவ பூதன வாத்தியங்கள் முழங்க, மலர் மாலை அணிவித்தும், மலர்களைத் தூவியும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.. அதனைத்தொடர்ந்து மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சின்னவர் அம்மா கோவில் வளாகம் முழுவதும் வலம் வந்து, கலச விளக்கு வேள்வி பூஜையை தொடங்கி வைத்த பின்னர் ஆதிபராசக்தி அம்மன் திருவுருவப்படத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு மஹா தீபாராதனை நடைபெற்றது இதையடுத்து கூடியிருந்த பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு 1008 மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன், பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன ஆன்மிக நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து அருளாசி பெற்றனர்

### ஆக்கிரமிப்பில் சிக்கி தவிக்கும் பள்ளி வாகனங்கள்:

# சின்னமனூரில் போக்குவரத்து நெரிசலால் நோயாளிகளும் மாணவர்களும் கடும் அவதி

தேனி மாவட்டம் சின்னமனூர் அரசு மருத்துவமனைசாலையில் பொன்னகர் முதல் முத்தாலம்மன் கோவில் வரையிலான முக்கிய சாலையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஆக்கிரமிப்புகளால் தினசரி கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இப்பகுதியில் தினமும் காலை 7:30 மணி முதல் 9:00 மணி வரையிலும், மாலை 4:00 மணி முதல் 6:30 மணி வரையிலும் சுமார் 25க்கும் மேற்பட்ட பள்ளி பேருந்துகளும் வேன்களும் தொடர்ச்சியாக சென்று வருகின்றன. இதுமட்டுமன்றி, அப்பகுதியில் காய்கறி சந்தை மற்றும் வணிக நிறுவனங்கள் இயங்குவதால் கனரக வாகனங்களின் போக்குவரத்தும் மிக அதிகமாக உள்ளது.

ஒருகாலத்தில் அகலமாகஇருந்தஇந்தசாலை, ஆக்கிரமிப்புகளால் சிறிது சிறிதாகக் சுருங்கி தற்சமயம் மிகவும் குறுகிய பாதையாக மாறிவிட்டது. இதன் காரணமாக பள்ளி பேருந்துகள் குறித்த நேரத்திற்குள் செல்ல முடியாமல் நீண்ட நேரமாக வாகன நெரிசலில் சிக்கி தவிக்கின்றன.

இதனால் பள்ளி மாணவர்கள் உரிய நேரத்திற்கு பள்ளிக்கு செல்ல முடியாமலும், அவர்களின் பெற்றோர்கள் பெரும் அச்சத்திலும் உறைந்துள்ளனர். மற்றொருபுறம், "அவசர பிரிவு நுழைவாயில் அருகே எந்தவித இடையூறும் செய்ய கூடாது, வாகனங்களை நிறுத்த கூடாது" என்ற நகராட்சியின் எச்சரிக்கை பலகைகள் இருந்தபோதிலும், அதை சற்றும் பொருட்படுத்தாமல் அரசு மருத்துவமனையின் நுழைவாயிலிலேயே ஏராளமான இருசக்கர வாகனங்கள் தாறுமாறாக



நிறுத்தப்படுகின்றன. இதனால் அவசர சிகிச்சைக்கு வரும் ஆம்புலன்ஸ் வாகனங்களும், நோயாளிகளும் மருத்துவமனைக்குள் நுழைய முடியாமல் கடும் அவதிக்கு உள்ளாகின்றனர்.

நகராட்சி நிர்வாகம் அவ்வப்போது ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுத்தாலும், அதன்பிறகு அப்பகுதியை முறையாக கண்காணிப்பதில்லை.

இதனால், ஒருமுறை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பிறகு, முன்னர் இருந்ததை விட இரட்டிப்பு மடங்காக மீண்டும் ஆக்கிரமிப்புகள் தலை தூக்குகின்றன. இது போன்ற தற்காலிக நடவடிக்கைகள் எந்த பலனையும் தருவதில்லை என்பதே வாகன ஓட்டிகளின் ஆதங்கமாக உள்ளது. எனவே, சின்னமனூர் நகராட்சி நிர்வாகமும் காவல்துறையும் உடனடியாக இதில் தலையிட்டு துரிதநடவடிக்கைஎடுக்க வேண்டும். குறிப்பாக பள்ளி இயங்கும் காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து பிரிவு காவல்துறையினர் இந்த சாலையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு, நெரிசலை உடனுக்குடன் சீரமைக்க வேண்டும். மேலும் பள்ளி நேரத்தில் சாலையோரங்களில் கண்டபடி நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்களை அகற்ற கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி, மீண்டும் ஆக்கிரமிப்பு நிகழாத வண்ணம் தொடர் கண்காணிப்பை உறுதி செய்ய வேண்டும். செய்தித் தாள் வாயிலாக முன்வைக்கப்படும் இக்கோரிக்கையை உணர்ந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே மாணவர்கள் அச்சமின்றி பள்ளிக்கு செல்லவும், நோயாளிகள் தடையின்றி சிகிச்சை பெறவும் வழிவகை ஏற்படும்.

# அன்னை தெரசா அன்பு சேவை அறக்கட்டளை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

தேசம் போற்றும் தியாகத் தாய் அன்னை தெரசா 116வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அன்னை தெரசா அன்பு சேவை அறக்கட்டளை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு 5கிலோஅரிசி, காய்கறிகள், பெட்சீட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி அறக்கட்டளை நிறுவனரும் தலைவருமான வழக்கறிஞர் இரா. திராவிடடில்லி ஏற்பாட்டில் ஆலோசகர்வழக்கறிஞர் நா.ஜெகதீசன் தலைமையில் மாதவரம் தொகுதி செங்குன்றம் மார்க்கெட் முசாபரி பங்களாவில் நடைபெற்றது. முன்னதாக அன்னை தெரசா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.





அறக்கட்டளை செயலாளர் கே.எல். செல்வகுமார், பொருளாளர் ஆர். யுவராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். ஜி.கந்தசாமி, தே.ரா. அருண்குமார், ஜி.தினேஷ், விஎம்டி. நேதாஜி, எம்.சந்தோஷ், புழல் கோ.நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செங்குன்றம் சுற்றுவட்டார நாடார் இளைஞர் அணி தலைவர் ஜெ.பால்ராஜ், புழல் வட்டார வியாபாரிகள் சங்கத் தலைவர் புழல் சி.செல்லதுரை, முத்துப்பாண்டி அரிசி ஆலை உரிமையாளர் எம்.சேர்மபாண்டியன், எஸ்.ஏ.எர்த்மூவர்ஸ் உரிமையாளர் பி.அன்பு, சாய் வெங்கடேஸ்வரா ஞானம் கார்மெண்ட்ஸ் உரிமையாளர் செ.யுவராஜ் ஆகியார் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு 50க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் கலைநிதி ரியல் எஸ்டேட் வே.பாரதியார், வழக்கறிஞர் ஜெ.செல்வகுமார், குளோபல் எலெக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளர் வி.பாலாஜி, எஸ்பிஇ ரியல் எஸ்டேட் பிளாக் இளா, நீலம் வழக்கறிஞர்கள் சங்கம் செயலாளர் எஸ்.அறிவுநிதி, பொருளாளர் என்.அப்துல் சமத் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் இரா.முரளி நன்றி நவின்றார்.

# பேரூராட்சி ஓய்வூதியர்களின் குறைகள் தீர்க்க செப்.2ல் சிறப்பு குறைதீர்வு கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்திற்குட்பட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் தொடர்பான நிலுவைக் குறைகளை தீர்க்கும் வகையில், செப்டம்பர் 2ம் தேதி சிறப்பு குறைதீர்வுகூட்டம்நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

சேத்துப்பட்டு, தேசூர், களம்பூர், கண்ணமங்கலம், கீழ்பென்னாத்தூர், பெரணமல்லூர், புதுப்பாளையம் மற்றும் வேட்டவலம் ஆகிய 8 பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான இக்கூட்டம், பேரூராட்சிகள் இயக்குநர் தலைமையில் செப்டம்பர் 2ம் தேதி காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை காணொளிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

ஓய்வூதியப் பயன்கள் தொடர்பாக குறைகள் நிலுவையில்உள்ளஓய்வு பெற்ற பேரூராட்சி பணியாளர்கள், கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து தீர்வு பெறலாம். இதற்காக சம்பந்தப்பட்ட ஓய்வுபெற்ற பணியாளர்கள், தங்களுக்கு தொடர்புடைய பேரூராட்சி அலுவலகம் அல்லது வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் கூட்டம் தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக நேரில் ஆஜராகுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.



# எஸ்.கே.பி. வனிதா பன்னாட்டுப்பள்ளியில் 7ஆம் ஆண்டு விளையாட்டு தின விழா






திருவண்ணாமலை எஸ்.கே.பி. வனிதா பன்னாட்டுப் பள்ளியில் மாணவர்களுக்கான 7ஆம் ஆண்டு விளையாட்டு தின விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு எஸ்.கே.பி. கல்விக் குழுமத் தலைவர் கு. கருணாநிதி தலைமை தாங்கினார். இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவின் சிறப்பு விருந்தினராக பெங்களூரைச் சேர்ந்த சர்வதேச தடகளப் போட்டி வெற்றியாளர் – 2019 கே. பிரியா கலந்து கொண்டார். அவரை விழாக்குழுவினர் மேள தாளம் முழங்க உற்சாகமாக வரவேற்றனர். தொடக்கமாக

இறைவணக்கப் பாடல், பள்ளிப் பெருமைப் பாடல் மற்றும் வரவேற்பு நடனம் நடைபெற்றது. தொடர்ந்து, பள்ளியின் 10ஆம் வகுப்பு மாணவி தன்வியா வரவேற்புரை ஆற்றினார். விழாவின் முக்கிய நிகழ்வாக தேசியக் கொடியை சிறப்பு விருந்தினர் கே. பிரியா ஏற்றினார். தொடர்ந்து, எஸ்.கே.பி. கல்வி நிறுவனத்தின் அடையாளத்தையும் பெருமையையும் பறைசாற்றும் வகையில் பள்ளிக் கொடியை பள்ளி முதல்வர் இந்திர லீலா ஏற்றினார்.

பின்னர், சிறப்பு விருந்தினர் மற்றும் பள்ளி முதல்வர் இணைந்து ஒலிம்பிக் தீபச்சுடரை ஏற்றினர். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. மாணவர்களின் தனித்திறனை வெளிப்படுத்தும் வகையில் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப்பந்தயங்கள் மற்றும் தொடர் ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினர் திருமதி கே. பிரியா அவர்களை கௌரவிக்கும் வகையில், பள்ளி முதல்வர் இந்திர லீலா கேடயம் வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார்.

தொடர்ந்து, பள்ளி மாணவர்களின் விளையாட்டுத் திறன்களைப் பாராட்டி முதல்வர் இந்திர லீலா சிறப்புரையாற்றினார்.

விழாவில், மழலை வகுப்பு மாணவர்கள் கடல்வாழ் உயிரினங்களின் நடனமும், 1 மற்றும் 2ஆம் வகுப்பு மாணவர்கள் பந்துகளைப் பயன்படுத்தி அழகிய நடனமும், 3 முதல் 5ஆம் வகுப்பு மாணவர்கள் மூங்கில் குச்சிகளைப் பயன்படுத்தி நடனமும், 6 முதல் 9 மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்கள் ஏரோபிக்ஸ் நடனமும் நிகழ்த்தி பார்வையாளர்களை கவர்ந்தனர். இதனைத் தொடர்ந்து, 2026–2027ஆம் ஆண்டிற்கான விளையாட்டு ஆண்டு அறிக்கையை உடற்கல்வி ஆசிரியர் திருமதி கிருஷ்ணவேணி வாசித்தார். இதில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் சாதனைகள் எடுத்துரைக்கப்பட்டன.

சிறப்பு விருந்தினர் கே. பிரியா மாணவர்களின் விளையாட்டுத் திறன்களைப் பாராட்டி, மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் தொடர்ந்து பங்கேற்று சாதிக்க பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு உரிய ஊக்கமும் ஆதரவும் வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர்கள் ஒருங்கிணைப்பாளரால் வாசிக்கப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

விழாவின் நிறைவாக பள்ளி மாணவத் தலைவன் மற்றும் மாணவத் தலைவி நன்றி உரையாற்றினர்.

பின்னர் நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சிறப்பாக செய்திருந்தனர்.



பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பாலசமுத்திரத்தில் அகோபில வரதராஜப் பெருமாள் கோயிலில் ஆவணி பிரம்மோற்ச விழா ஆக.23ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் 7ம் நாளான நேற்று அகோபில வரதராஜப் பெருமாள், ஸ்ரீதேவி மற்றும் பூதேவிக்கு திருக்கல்யாண வைபவம் நடந்தது. முன்னதாக, பெருமாள் மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு மேல் பக்தர்களின் கோவிந்தா முழக்கத்துடன் திருக்கல்யாணம் நடந்தது. பெருமாள் மணக்கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இரவு 8 மணிக்கு பவளக்கால் சப்பரத்தில் சுவாமி வீதியுலா நடந்தது. இன்று (ஆக.30) இரவு 7 மணிக்கு பாரி வேட்டை, நாளை (ஆக.31) காலை 6.30 மணிக்கு தேரோட்டம், தொடர்ந்து தேர்கால் பார்த்தல் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. செப்.1ம் தேதி கொடியிறக்குதல், செப்.2ம் தேதி விடையாற்றி உற்சவத்துடன் விழா நிறைவு பெறுகிறது.

# கலசபாக்கம் தொகுதி வளர்ச்சிப்பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும்

## ஆட்சியரிடம் அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி வலியுறுத்தல்



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுடன், சாலை வசதி, பள்ளிக் கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், ஊராட்சி மன்ற அலுவலகங்கள் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்கிடம் அதிமுக கொறடாவும், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வலியுறுத்தினார். கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது பகுதிகளில் நிலவும் அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தியிடம் தொடர்ந்து கோரிக்கை மனுக்களை அளித்து வந்தனர்.

குறிப்பாக, சேதமடைந்த சாலைகளை சீரமைத்தல், புதிய சாலை வசதிகளை ஏற்படுத்துதல், பள்ளிகளுக்கு தேவையான புதிய கட்டிடங்களை கட்டுதல், பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்களை சீரமைத்தல், அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டிடங்கள் அமைத்தல், ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு கட்டிட வசதி ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து, பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை தொகுத்து, மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்கை நேரில் சந்தித்த அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, அந்த மனுக்களை வழங்கினார். ஒவ்வொரு கோரிக்கையையும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து, உரிய ஆய்வு மேற்கொண்டு, சாத்தியமான பணிகளை காலதாமதமின்றி செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். மேலும், கிராமப்புறங்களில் சாலை, கல்வி மற்றும் அடிப்படைகட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டால் மட்டுமே பொதுமக்களின் அன்றாட வாழ்வாதாரம் எளிதாகும் என்பதால், மக்கள் அளித்துள்ள கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் அவர் வலியுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு திமுக மற்றும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து அதிமுக சார்பில் நீதிமன்றம் வரை சென்று சட்டப் போராட்டம் நடத்தப்பட்டு, ஜல்லிக்கட்டு மீண்டும் நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழகத்தில் அதிமுக தான் பிரதான எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகிறது.

மக்களின் பிரச்சினைகள் குறித்து சட்டமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம். விலைவாசி உயர்வு உள்ளிட்ட பொதுமக்களை நேரடியாக பாதிக்கும் பிரச்சினைகளையும் அதிமுக தொடர்ந்து எழுப்பி வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திலும் விலைவாசி உயர்வு குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குரல் எழுப்பியுள்ளார். மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதே அதிமுகவின் நிலைப்பாடு. தற்போதைய தவெக அரசின் 100 நாள் ஆட்சி குறித்து மதிப்பிடும் போது, அது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் செயல்படவில்லை என்றும், ஆட்சியின் செயல்பாடு 'ஜீரோ' என்றும் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி விமர்சித்தார். அதே நேரத்தில், சட்டமன்ற நிகழ்வுகளை பொதுமக்கள் நேரடியாக தெரிந்து கொள்ளும் வகையில் சட்டமன்ற நேரலை ஒளிபரப்பை அதிமுக வரவேற்கிறது. சட்டமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் மற்றும் மக்கள்பிரச்சினைகள் குறித்து வெளிப்படைத் தன்மையுடன் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு இது பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கலசபாக்கம் தொகுதி மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, நிறைவேற்றக்கூடிய பணிகளுக்கு உரிய நிதி ஒதுக்கீடு பெற்று, அவற்றை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ராமச்சந்திரன், முக்கூர் என். சுப்பிரமணியன், எல். ஜெயசுதா, எஸ்.வேலு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வேளாண் இயந்திரமயமாக்குதல் துணை இயக்க திட்டத்தின் (SMAM) கீழ் இராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள்

## மானியத்தில் பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு

இராணிப்பேட்டை மாவட்டத்தில், தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் வேளாண் இயந்திரமயமாக்குதல் துணை இயக்கத் திட்டம் (SMAM) 202627 கீழ், விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் பெற்றுப் பயன்பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் டிராக்டர், பவர் டில்லர். பவர் வீடர் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் 343 எண்கள் 450 லட்சம் மதிப்பில் மானியத்தில் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த விவசாயிகள் தரவு தளத்தில் (Agri Stack Tamilnadu Farmer Registry) பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் மட்டுமே வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் பெற விண்ணப்பிக்க இயலும்.

தனிப்பட்ட சிறு/குறு. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச விலை அல்லது மொத்த விலையில் 50 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதர விவசாயி களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச விலை அல்லது மொத்த விலையில் 40 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.



மேலும், இத்திட்டத்தில் ஆதி திராவிடர், பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு/குறு விவசாயிகளுக்கு அவர்களின் பங்களிப்புத் தொகையினை குறைத்து உதவிடும் வகையில் நடைமுறையில் உள்ள மானியத்துடன் 20 சதவீத கூடுதல் மானியம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், விசைகளையெடுக்கும் கருவி மற்றும் தட்டை வெட்டும் கருவி ஆகியவற்றை வாங்குவதற்கு பொதுப்பிரிவை சார்ந்த சிறு குறு விவசாயிகளுக்கு 10% கூடுதல் மானியம் வழங்கப்படும். இராணிப்பேட்டை மாவட்டத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது கைப்பேசியில் உள்ள "உழவர் செயலி (Uzhavar App)" பதிவிறக்கம் செய்து ஒருமுறை பதிவு (One Time Registration) மேற்கொள்ள வேண்டும். பின்னர், "வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு" "வேளாண்மைப் பொறியியல் மானியத் திட்டங்கள்" என்ற பிரிவில் ஆதார் எண்ணை உள்ளீடு செய்து தேவையான இயந்திரம் அல்லது கருவிகளுக்கு விண்ணப்பிகலாம். ஒவ்வொரு மாதமும் 1 முதல் 7ஆம் தேதி வரை விண்ணப்பிகலாம். 8ஆம் தேதி கணினி குலுக்கல் (Computer Randomization) முறையில் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்படும். ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டு தகுதியான விவசாயிகள் தேர்வு செய்யப்படுவர்.இலக்கு எட்டப்படாத நிலையில், அதே மாதம் 15 முதல் 21ஆம் தேதி வரை மீண்டும் விண்ணப்பிகலாம். 22ஆம் தேதி மீண்டும் கணினி குலுக்கல் (Computer Randomization) முறையில் தேர்வு நடைபெறும். இராணிப்பேட்டை மாவட்ட விவசாயிகள் உழவன் செயலி மூலம் உரிய காலத்திற்குள் விண்ணப்பித்து, வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானியத்தில் பெற்று பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் தலைமையில் ஆற்காடு நகர மன்ற கூட்டம்



ஆற்காடு நகர மன்ற கூட்டம் நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சி நகர மன்ற மாதாந்திர கூட்டம் கூட்டரங்கில் 28.08.26 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் தலைமை தாங்கினார் ஆணையாளர் சுரேஷ்குமார் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசியதாவது நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் ஆற்காடு பஸ் நிலையத்தில் இருந்த கடைகள் இடிக்கப்பட்டு புதியதாக கடைகள் கட்டப்பட்டுள்ளன ஏற்கனவே கடை நடத்தியவர்களுக்கு மீண்டும் கடை வழங்கப்படுவதற்கு நகர மன்ற கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இதனை எதிர்த்து நேதாஜி சங்கம் சார்பில் நீதிமன்றத்தின் வாயிலாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ரத்து செய்ய வழக்கு தொடர்ந்துள்ளனர் இந்த சங்கம் முறையாக பதிவு பெற்ற சங்கமா என்பன குறித்து நகராட்சி ஆணையாளர் ஏழு நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் பொன் ராஜசேகர் பேசுகையில் ஏற்கனவே கடை நடத்தியவர்களுக்கு மீண்டும் கடை வழங்குவதாக நகர மன்ற தலைவர் கூறினார் இதனால் கடை நடத்தியவர்கள் நகர மன்ற தலைவரிடம் கடை சாவியை ஒப்படைத்தனர் எனவே மீண்டும் அவர்களுக்கு பஸ் நிலையத்தில் கடை வழங்க வேண்டும் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு முன்பு தள்ளுவண்டிகளில் கடை நடத்தி வருகின்றனர் அவற்றை அப்புறப்படுத்தி ஏற்கனவே கடை நடத்தியவர்களுக்கு மீண்டும் கடை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். நகர மன்ற உறுப்பினர் ஆனந்த் பேசுகையில் பஸ் நிலை மாறிய பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மாங்காய் மண்டி தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது அதனை வேறு இடத்திற்கு மாற்றிய அந்த இடத்தில் பூங்கா அமைத்து தர வேண்டும் ஏற்கனவே உள்ள பூங்காக்களை சீரமைத்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நகர மன்ற உறுப்பினர் குணாளன் பேசுகையில் எனது வார்டில் காய்கனி கழிவிலிருந்து தயாரிக்கப்படும் பயோ கேஸ் உள்ளது இதை பயன்படுத்துவதால் சுற்றியுள்ள பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றன இதனால் இது கடந்த சில ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது இதனை மீண்டும் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது சுற்றி உள்ள பகுதிகளில் அதிக வீடுகள் உள்ளதால் துர்நாற்றத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த நகர மன்ற கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA